தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2019 சிலை (15,30-12-1988) ஓர் உருபா (இதழ் எண்: 114-115)

சாதிச் சலுகைகளாலும் போராட்டங்களாலும் தமிழின முன்னேற்றம், மேலும் ஆயிரம் ஆண்டுகள் தடைப்படும்!

தமிழின உணர்வு அனைத்துத் தமிழர்களிடத்தும் கால்கொள்ள வேண்டும்!

தி.மு.க.வையே தமிழர்கள் வெற்றிபெறச் செய்க!

தந்தை பெரியார் அவர்களின் முக்கால் நூற்றாண்டுக் கால, தொடர்ந்த அரும்பெருந் தொண்டால், தமிழினத்தில், அடங்கி ஒடுங்கியிருந்த சாதியுணர்வுகள், இக்கால், அவ்வவ் வுட்பிரிவிலும் ஏதோ ஒருவகையில், தழைத்து வளரத் தொடங்கி வருவது, தமிழின நலம் கருதும் அறிஞர்களிடையில் பெரிய ஒரு மனக்கலக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. அரசுப் பணி அமர்த்த முறையிலும், சலுகை முறையிலும் மேலோட்டமாகக் கணக்கிட்டுப் பார்த்தால், சாதியுணர்வுகளும் பிரிவுகளும் ஒருவாறு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு வகையில் கல்வி முன்னேற்றத்திற்கும், பணிவாய்ப்புகளுக்கும் அடிப்படையாக உள்ளதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் தமிழினம் ஒட்டு மொத்தமாகவே தாழ்த்தப்பட்டும் வீழ்த்தப்பட்டும் கிடப்பதையும், அதனால் அது, அரசியல், பொருளியல், குமுகவியல், மொழி, கலை, பண்பாடு முதலிய அனைத்துத் துறைகளிலும் முன்னேறாமல் பின்தங்கிக் கிடப்பதையும் வரலாற்று அடிப்படையில் பார்க்கும் பொழுது, சாதியுணர்வுகளால் சலுகை பெற்றுக் கொண்டு ஏதோ ஒரு வகையில் வாழ்ந்து கிடப்பதை விட, அவ்வுணர்வுகளை ஒட்டு மொத்தமாகத் தகர்த்தெறிந்து விட்டுத் தமிழினமே இணைந்து முன்னேறுவதும் அடிமை மீட்சி பெறுவதுமே முகாமை என்று கருத வேண்டியுள்ளது. இக்கால் எழுந்துள்ள சாதிப் போராட்டங்களாலும், சலுகைகளாலும் நம் தமிழின முன்னேற்றம், மேலும் ஓர் ஆயிரம் ஆண்டுகள் தடைப்படலாம் என்று அஞ்ச வேண்டியுள்ளது.

முன்னைய சலுகைகள் தற்காலிக வாழ்க்கைக்கு ஒருவகையில் உதவுவனவாகக் கருதினால், பின்னைய சாதித் தகர்ப்பு முயற்சி, தமிழினத்தின் நிலையான அடிமை நீக்கத்திற்கும் விடுதலைக்கும் அடிப்படையாக உள்ளதை, வரலாற்றடிப் படையில், பிற இனங்களின் முன்னேற்றத்தைத் தமிழினத் தாழ்ச்சியோடு ஒப்பிட்டுச் சிந்தித்துப் பார்ப்பவர்கள் மறுக்க முடியாது.

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள் !

மடல்: 6

மதுரை நடுவண் சிறை.
3-9-88.

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு, வணக்கங்கள்.

திரு. இளமுருகன் பிணையலில் வந்தபின் தங்களைச் சந்தித்துப் பேசியிருப்பார். நாங்கள் அனைவரும் இங்கு நலமுடன் உள்ளோம். எவ்வகைக் குறையும் இல்லை. மற்றபடி வெளியில் இருந்து உங்கள் கொள்கைக்குத் துணையாகப் பணியாற்ற இயலவில்லையே என்கிற குறைதான்.

அண்மையில் **மிசோரம்** — மாநில சட்ட அவையைக் கூட கலைத்து, ஆளுநர் ஆட்சியைக் கொண்டுவந்துள்ளனர். கடந்த 40 ஆண்டுகளாகத் தனிநாட்டு விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த **இலால்டெங்கா** — விடம் ஒப்பந்தம் என்று பேசிப் போலி ஒப்பந்தம் செய்துவிட்டு, இப்பொழுது கழுத்தறுத்துள்ளது, இந்த இந்திய அரசு. ஒப்பந்தத்தின்படி, மிசோரம் முழு உரிமை பெற்ற ஒரு தன்னிறைவு மாநிலமாக அறிவிக்கப்பட்டது. அனைத்து விளைச்சல் பொருள்களும் அம் மாநிலத்திற்கே என்றும், வரி தண்டுதல் கூட இல்லை என்றும், மிசோரமில் பிற நாட்டினர் நுழைவது என்றால் கூட இல்லை என்றும், மிசோரமில் பிற நாட்டினர் நுழைவது என்றால் கூட கடவுச்சீட்டு (Pass Port) வாங்கிக் கொண்டுதான் நுழையக் கூடிய அளவிலான உரிமை அளிப்பதாகவும். அறிவித்து விட்டு, இப்பொழுது அவரின் கழுத்தையறுத்துக் கீழே தள்ளியுள்ளனர். இதே போல்தான் கூர்க்க ஒப்பந்தமும் மாறப் போவது திண்ணம். அடக்கு முறையின் மூலமே அனைத்தையும் வென்றெடுத்து விடலாம் என எண்ணிக் கொண்டிருக்கிறது இராசீவ் அரசு.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு அடுத்த இதழ்கள் வெளியாகி விட்டனவா என்று தெரியவில்லை. வீடு மாற்றுதல் தொடர்பாக அம்மா எழுதியிருந்தார்கள், எத்தகையது என்று தெரியவில்லை.

இங்கு, எங்களைக் குருதித் தொடர்புடையோர் தவிர எவரும் செவ்வாய், வெள்ளி தவிர பிற நாள்களில் காண இயலாதாம். திரு. இளமாறன் அண்ணான் பிணையலில் வந்து விட்டாரா என்பது அறிய முடியவில்லை. நெல்லை நிகழ்ச்சிகள் யாவும் மிகச் சிறப்புடன் நடந்திருக்கும் என எண்ணுகிறேன். தங்களின் மடலைக் காண ஆவலாய் நிற்கிறோம்.

அன்பு மகன்
பொழிலன்.

(தொடர்ச்சி அடுத்த பத்தி)

இந்திய அமைதிப் படைக்கு 130 கோடி செலவு

600 வீரர்கள் பலி! 1600 பேர் காயம்!

இலங்கையில் உள்ள இந்திய அமைதிக் காப்புப் படையினருக்காக 1987-சூலை முதல் கடந்த செப்டம்பர் 30 ஆம் பக்கல் வரை உருபா 130 கோடியே 17 இலக்கம் செலவிடப்பட்டுள்ளதாக இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் பாதுகாப்புத் துறை இணையமைச்சர் சிந்தாமணி பாணிக்கிரகி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அஃதாவது தமிழீழத்தில் செப்டம்பர் 30-ஆம் பக்கல் வரை நடந்த மோதல்களில் இந்தியப் படையின் 33 அதிகாரிகளும், 572 இளநிலை அதிகாரிகளும் மற்றவர்களும் உயிரிழந்தனர். 97 அதிகாரிகளும் 1605 வீரர்களும் காயமடைந்தனர் என்று அவர் சொன்னார்.

நடப்பு 1988-ஆம் ஆண்டில் கடந்த சனவரி முதல் அக்டோபர் வரை 17 அதிகாரிகள், 22 இளநிலை அதிகாரிகள் உட்பட 293 பேர் இறந்தனர். 48 அதிகாரிகள் உட்பட 13 பேரைக் காணவில்லை என்றும் தெரிவித்தார்.

1988 நவம்பர் 15-இல் இவ்விளக்கங்களை வெளியிட்ட இந்திய அமைச்சர் மறுதரப்பில் ஏற்பட்ட சேதம் பற்றி எதுவும் கூறவில்லை.

— நன்றி **'சுதந்திரன்'** கார்த்திகை — மார்கழி '88.

(முன் பத்தி தொடர்ச்சி)

பி.கு : எங்களுக்கு என்.எசு.ஏ. போட்டது பற்றி ஒரு குழு ஆய்வு செய்ய எங்களை இம்மாத இறுதியில் சென்னைக்கு அழைத்து வருவார்கள். ஒரு நாள் சென்னையில் வைத்திருந்து விட்டு, பின்பு இங்கு கொண்டு வநது விடுவாாகள். அதுபற்றிய நாள் இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. தெரிந்தவுடன் எழுதுகிறேன். அக்குழு எங்களை ஆய்வு செய்யும் பொழுது, வழக்கறிஞர் அல்லாத ஒருவர் உடன் இருக்கலாம். எனவே அதுபற்றி எண்ணவும், விரைந்து நான் நாளைக் குறிப்பிட்டவுடன் எழுதுகிறேன். 0

சாதியம்.

காலம்காலமாகத் தமிழ்நாட்டைக் கொல்லும் உட்பகையாகச் சாதியம் உள்ளது. சாதியத்தால் மிகவும் துன்புறுவோர் தாழ்த்தப்படும் — பிற்படுத்தப்படும் மக்களே. சாதியை முற்றுக ஒழிக்கப் போராடாமல், படிப்பிலும் வேலையிலும் சலுகை பெறுவதற்காக அதை ஏற்றுக்கொண்டதன் மூலம் சாதியம் இன்று வளர்த்து விடப்பட்டிருக்கிறது. 0

பார்ப்பனரின் அறிவியல் பார்வை !

பழைய புராணக் கதைகளைப் பார்ப்பனர்கள் விளக்கப் படுத்துவதே வேருகஇருக்கிறது. இந்நிலையில் மைசூரிலுள்ள அணு ஆற்றல் குழுவின் தலைவர் பர், எம். ஆர். சீனிவாசன் (இவரும் பார்ப்பனரே) இவர் பழைய மைசூர் பகுதியிலிருந்த பார்ப்பனப் புரோகிதர் ஒருவரின் பெயரர். ஆனுல் அறிவியல் உணர்வுள்ளவர்.

அவர் அண்மையில் தொலைக்காட்சியில் வெளியிடப் பெற்றுவரும் பழைய இதிகாசக் கதைகளான *இராமாயணம், மகாபாரதம்* தொடர்களைக் குறித்துத் தம் அச்சத்தை வெளிபடுத்தியிருக்கிருர். "இத் தொடர்கள் இந்தியர்களின் மன வளர்ச்சியை மீண்டும் பழைய கால மந்தர தந்திரக் கற்பனை உணர்வுகளைப் புதிய பாதையில் செலுத்திவிடலாம். இந்நிலை கட்டாயம் இந்திய மக்களின் அறிவியல் உணர்வு முன்னேற்றத்திற்கு எதிரானதாகும்" என்று அவர் கூறுகிருர்.

சில நிகழ்ச்சிகளை அக்கதைகளிலிருந்து அவர் எடுத்துக் காட்டிப் பின்வருமாறு கூறுகிருர்.

"மகாபாரதத்தில் குந்திதேவி சூரியனைப் பார்த்த மட்டில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுள் என்று காட்டப் பெறுகிறது. இது முற்றிலும் பகுத்தறிவுக்குப் புறம்பானதும், அறிவியலுக்கு மாறுனதும் ஆகும்." (ஆனுல் உண்மையான மகாபாரதக் கதையில் இவ்வாறு இல்லை. குந்தி, தன் ஆறு பிள்ளைகளையுமே திருமணம் ஆகாத முன்பும், பின்பும் சூரியன் முதலிய ஆறு தேவர்களைத் தன் மந்திர ஆற்றலால் நேரில் தோன்றச் செய்து, அவர்களுடன் உடலுறவு கொண்டு கருவுற்றுப் பெற்றுள் எனபதே மகாபாரதக் கதையாகும். ஆனுல் அறிஞர் சீனிவாசன் தொலைக் காட்சியில் காட்ட பெற்ற கதையையே பகுத்தறிவுக்குப் புறம்பானதும் அறிவியலுக்கு மாறுனதும் ஆகும் என்று குறிப்பிடும் பொழுது, பாரதத்தில் உள்ளபடியான கதையை மாந்தத்தன்மைக்கும் பண்பாட்டிற்கும் மாறுனது என்று கூடக் கண்டிக்கலாம். ஆனுல் திரு. சீனிவாசனுக்கு மகாபாரதக் கதையின் உண்மையான வடிவம் தெரியாமலிருக்க முடியாது. இருப்பினும் அதை ஏனே அவர் கண்டுகொள்ளவில்லை. இஃது ஏன் என்று தெரியவில்லை. —**ஆசிரியர்**.)

இனி, அடுத்து அவர் இன்னெரு நிகழ்ச்சியையும் குறிப்பிடுகிருர். "துரோணர், ஏகலைவனிடம் தமக்குக் குரு காணிக்கையாக அவனது கட்டைவிரலைத் தரக் கேட்டது, சரியான "நாணயமற்ற சூழ்ச்சி"யாகும். இது அர்ச்சுனனின் வில்லாற்றல் பெருமையை நிலை நிறுத்திக் கொள்வதற்காகத்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

எனவே, தற்காலிக வாழ்க்கை வாய்ப்பா, அல்லது நிலையான அடிமை நீக்க விடுதலை உரிமையா, இவ்விரண்டில் எது தேவை என்று ஆழமாக எண்ணிப் பார்த்தால், இரண்டாம் நிலையே தமிழினத்திற்கு ஒட்டுமொத்தமான உடனடித்தேவை என்றே சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறேம். நம்மின் இன்றைய தேவையை எண்ணி, நம் இனத்தின் எதிர்காலத்தையே இருளாக்கி விடும் தன்மைகளை நாம் அறவே தவிர்த்தாக வேண்டும். அத்தகைய ஒரு முயற்சிக்கு, நம்மிடையே இன்றுள்ள சாதிப்பிளவுகளை விலக்கிக் கொள்வதுதான் முற்றிலும் பொருத்தமானதாகவும், தக்கதாகவும் இருத்தல் முடியும்.

இன்றுள்ள சாதியுணர்வுகள் சிந்திக்கும் உணர்வற்ற மக்களை எளிதில் கவர்வதற்கும், அவர்களை உடனுக்குடன் ஒன்று கூட்டுவதற்கும் பெரும் பயன் தரும் வாய்ப்பாக இருக்கலாம். ஆனுல் வடுப்பட்டு விட்ட சாதியுணர்வுகளால் பிளவு பட்டு நிற்கும் இவ்வினத்தை ஒன்று படுத்தும் வாய்ப்பு இனி வேறு வகையில் வந்து சேருமா என்று எண்ணிப் பாருங்கள்! அடிப்பதால் விலகி நிற்கும் நீர்ப்பரப்பு போன்றதன்று சாதிப் பிரிவு! பாறையை உடைத்து வேறுவேருகச் சிதர்க்கும் உணர்வுப் பிளவு! எனவே, தற்காலிகச் சலுகைகளைப் பெறுவதற்காகச் சாதிகளைத் துணையாகக் கொண்டால், அவை நிலையான பிளவுகளைத் தமிழினத்தில் உண்டாக்கிக் கொண்டு, என்றென்றும், எந்தச் சூழ்நிலையிலும் இவ்வினம் ஒன்றுபட முடியாத வேறுபாடுகளை வடுப்பரியச் செய்துவிடும் என்று எண்ணிக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வடிப்படையான விளக்க வுணர்வுகளைக் கைக் கொண்டு, மனத் தெளிவு பெற்று, வருகின்ற தேர்தலில், இன்றுள்ள அரசியல் அணுகுமுறைகளுக்கு ஏற்ப,தமிழின நலன்களைக் கட்டிக் காக்கும் திறனுள்ள ஒரு கட்சியை நாம் தேர்ந்தெடுத்து ஆட்சியில் அமர்த்த வேண்டியவர்களாக இருத்தல் வேண்டும்.

அத்தகைய நிலையில், இன்று தேர்தலுக்கு நிற்கும் பல்வேறு கொள்கையுடைய கட்சிகளுள், நம் அறிவுக்கும் உணர்வுக்கும் சரியென்று பட்ட வகையில், *கலைஞர் கருணநிதி* தலைமையேற்று நடத்தும் **திராவிட முன்னேற்றக் கழகமே** தமிழின மேம்பாட்டிற்கு உதவுகின்ற கட்சியாக நாம் கருதுகிறேம். முன்னைய ஆட்சி நிலையில் சில தவறுகளை அக்கட்சி செய்திருந்தாலும், இன்றைய போலியும், பொய்ம்மையும் கொடிகட்டிப் பறக்கும் அரசியல் சூழலில், அவற்றைப் பொருட்படுத்தாமல்,அதையே தமிழக ஆட்சியமைக்கத் தகுதியுடைய கட்சியாகத் தேர்ந்தெடுக்குமாறு தமிழின நலம் நாடும் மக்களை நாம் அன்புடன் கேட்டுக்கொள்கிறேம். 0

நடுவணரசின் பணநொடிவு நிலை.

தில்லி அரசின் கடந்த வரவு செலவுக் கணக்கு அறிக்கையைப் போல், தனியார் ஒருவரின் கணக்கு இருந்தால், அவரை நம்பி எந்த வைப்பகமும் ஓர் உருபா கூடக் கடன் கொடுக்காது. அவருக்குக் கடன் கொடுத்தவர்களுள் யாராவது வழக்கு மன்றத்தை அணுகினால் அவர் நொடிந்த (திவால்) பேர்வழி என்று அ்து உடனே அறிவிக்கும். அந்த அளவுக்கு நடுவண் அரசு பணநிலையில் கடனாளி அரசாக உள்ளது.

1988-89-இல் இந்திய அரசுக்கு உள்ள கடன் அதன் சொத்தை விட 40,080 (நாற்பதாயிரத்து எண்பது) கோடி உருபா மிகுதியாகும். அதன் சொத்து மதிப்பு உரு 1, 84, 100 கோடி. கடன் உருபா 2, 24, 180 கோடி.

இன்றைய நிலவரப்படி பணத்தாள்களை அளவுக்கு மீறி அச்சடித்துக் கொள்ளும் அதிகாரம் அரசுக்கு இல்லையென்றால், அது தன் இருப்பில் உள்ள பணத்தைக் கொண்டு, தனக்குக் கடன் கொடுத்துள்ள பொதுமக்களின் கணக்கைத் தீர்க்க அவர்கள் தந்த ஓர் உருபாவுக்கு வட்டியில்லாமல் வெறும் 84 காசுகளையே திருப்பிக் கொடுக்க முடியும். இந்த அழகில்தான் இந்திய அரசு மேலும் மேலும் ஊதாரித் தனமான — மெத்தவும் ஆடம்பரத்தனமான செலவுகளைக் கொஞ்சமும் பொறுப்பில்லாமல் செலவழித்து வருகிறது.

தனக்குச் சொத்து மதிப்பு இல்லாத பொழுது, அதுவும் தலைக்கு மேல் கடன்கள் உள்ள பொழுது, இந்திய அரசு, தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி வெறும் தாள் பணங்களை அச்சிட்டுத் தன் நிலையைச் சரிகட்டிக் கொண்டு வருவது, அப்பட்டமாகப் பொதுமக்களை ஏமாற்றும் ஒரு செயலே ஆகும்!

இப்பொழுதைய அரசு நிலையை வெட்ட வெளிச்சமாகச் சொல்ல வேண்டும் என்றால், அரசு தன் அன்றாடச் செலவுக்காக ஒவ்வொரு நாளும் 24 கோடி உருபா தாள் பணங்களை அச்சிட்டுக் கொள்கிறது. நாணயங்கள் அன்று; அதற்கும் நிறைய மூலப் பொருள் தேவை. அதற்கு நிறைய செலவாகும். இவ்வாறு அச்சிட்டுக் கொள்ளும் பணம் வேறு ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுவதில்லை. அரசின் அன்றாடச் செலவுகளுக்கே பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. தனியார் ஒருவர் தன் தேவைக்கு எனக் கள்ளப் பணம் அடித்துக் கொள்வதைப் போன்றதுதான் இதுவும். ஆனால் அரசு தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு இதை நல்ல பணமாக அச்சிட்டுச் செலவழித்துக் கொள்கிறது.

இந்த நிலைமை அரசுக்கு ஏன் ஏற்பட்டது என்று பார்த்தால், அப்பொழுதுதான் இவ்வரசின் ஊதாரித்தனத்தையும் பொறுப்பற்ற பொறுக்கல் தன்மையையும் விளங்கிக் கொள்ள முடியும்.

இப்பொழுதைய தில்லி அரசில் உள்ள ஆளும் திருடர்கள் (ஆம்! பொதுமக்கள் பணத்தை அதிகாரத்தனமாகக் கொள்ளையிட்டு ஆடம்பரமாக ஊதாரித்தனமாகச் செலவழிப்பவர்களை வேறு எப்படிப் பெயரிட்டு அழைப்பது?) எனவே அவர்கள் அனைவரும் ஊதாரிகளே! கடந்த பத்தாண்டுகளில் தான் இந்த ஊதாரித்தனம் மிக மிகப் பெருகியுள்ளது. 1980-81-இல் அரசு வரவுக்கு மேல் 42,808 கோடி செலவிட்டிருக்கிறது!

இவ்வாறு கண்மூடித்தனமாகச் செலவு செய்வதால் அரசு கடனாளியாவது ஒருபுறம் இருக்கட்டும். மற்றொரு புறம் விலைவாசி தலைக்கு மேல் ஏறிக் கொண்டிருப்பதைத்தான் நாம் பார்த்தல் வேண்டும். அரசு புதிதாக அச்சிட்டுக் கொள்ளும் ஒவ்வோர் உருபாவுக்கும் இணையாக, அதற்குமேல் பண்டங்களின் விலை ஏறிக் கொண்டே போகிறது என்பதை நாம் மறந்து விடுதல் கூடாது 1970-78 கால கட்டத்தில் நம் வாழ்க்கைச் செலவில் 135 புள்ளிகள்தாம் அதிகரித்திருந்தன. ஆனால் 1978-87 கால கட்டத்தில் 431 புள்ளிகள் அதிகரித்து விட்டன. 1960-ஆம் ஆண்டில் ஓர் உருபா மதிப்பு இன்று 16 காசுக்கும் குறைந்து விட்டது.

இவ்வாறு அரசின் மொத்தச் சொத்து மதிப்பு குறைவதால் மக்கள் பணமாகச் சேமிப்பதை விட்டு விட்டுத் தங்கத்திலும், நிலம், வீடு போன்றவற்றிலும் தங்கள் பணத்தை ஈடுபடுத்துகின்றனர். எனவேதான் தங்கத்தின் விலையும் வீடு போன்றவற்றின் விலையும் வானளாவ உயர்ந்து கொண்டே போவதைக் காண்கிறோம்.

அரசு கண்ணை மூடிக்கொண்டு, வெளிநாடுகளிலும் உள்நாட்டில் பொது மக்களிடமும் கடன் வாங்கிக் கொண்டே போகிறது. இதுவே அதன் நொடிவு நிலைக்கான தலையாய சான்றாகும்.

இவ்வகையில் அரசின் இப்பொழுதைய நிலையைச் சொல்ல வேண்டுமானால், 1988-89-இல் அரசு வாங்குகிற கடன், அதன் முந்திய கடன்களின் வட்டியைக் கொடுக்கவே சரியாய்ப் போய் விடுகிறது. அஃதாவது இந்த ஆண்டில் அது வாங்கிய கடன் 7000 கோடி உருபா. அது கொடுக்க வேண்டிய கடனுக்கான வட்டி உரு. 6912 கோடி ஆகும். இவ்வாறு வட்டி கொடுக்க ஆண்டுதோறும் அது வாங்கும் கடன் கூடிக் கொண்டே போகிறது. கடன் கூடக் கூட அது செலுத்த வேண்டிய வட்டியும் ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டே போகிறது.

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

தமிழ்த் தேசத்தின் திரிபாளர்கள் (Revisonists) யார்?

எந்த ஒரு தேசத்தின் விடுதலையும் அந்த தேசத்தின் மக்கள் விடுதலையிலேயே அடங்கியுள்ளது.

அம் மக்கள் விடுதலை என்பது அத்தேச மக்களின் அடிமைத் தளங்களிலிருந்தான விடுதலையாகும்.

அம் மக்களின் அடிமைத் தனங்கள் என்பன வரலாற்றியலில், அரசியலில், பொருளியலில், குமுக (சமுக)வியலில் ஆய்வு செய்யப் பெற வேண்டுவன ஆகும்.

அங்ஙனம் ஆய்வு செய்யும்போது அந்த ஆய்வுப் பார்வை மககள் குமுகக் கண்ணோட்டத்தின் அஃதாவது பெரும்பான்மையான மக்களாகிய உழைக்கும் மக்களின் நலன்களிலிருந்து இருத்தல் வேண்டும்.

மாறாக, அவ்வுழைக்கும் மக்களை உழைக்க வைத்து அவ்வுழைப்பின் மூலமான உருவாக்கங்களையோ அல்லது அதன் துணைவரவுகளான — செலவினங்கள் போக எஞ்சியதான ஊதியம் முழுமையையும் தமதாக்கிக் கொள்ளுகிற சிறுபான்மைக் கூட்டத்திலிருந்து ஆன கண்ணோட்டமாக அஃது இருத்தல் கூடாது.

அஃது உண்மை வரலாறும் ஆகாது. அஃது ஒரு சார்பு வரலாறாகவே அமையும்.

— இவ் வகையில் மாந்த இனத்தின் மிகப்பழைய காலங்களிலும் சரி,
— அரச நடைமுறை கொண்ட காலங்களிலும் சரி,
— அதன் பிறகு நிலவுடைமையாளர்களின் சாய்கால் மிக்குயர்ந்த காலங்களிலும் சரி,

வரலாறுகள் அந்த அந்தச் சிறுபான்மைப் பகுப்பு மக்களின் சார்பு வரலாறாகவும்,

இலக்கியங்களை — மிகப் பெரும் பகுதிகள் அந்தச் சிறுபான்மைப் பகுப்பு மக்களின் சார்பு இலக்கியங்களாகவும் —

அமைந்திருப்பது இயல்பாகவும், கால அழுத்தத்தின் வெளிப் பாடாகவும் இருக்கின்றன.

அவ்வகைக் குமுக வாழ்விற்குப் பின்னர், அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தொழில் வளங்கள் பெருகப் பெருக, தொழிலாளர்களைப் பெருக்கி, தொழில் மூலமாக மிக விரைந்து வளர்ந்தது — அப் பணக்காரச் சிறு கூட்டம்.

முதலீடுகளின் வழியிலான மிகை வருவாய் மீண்டும் மீண்டும் முதலாளிகளை வந்து அடைய அடைய, முதலாளியம் தம் வலிமையை மிக அதிகமாக வளர்த்துக் கொண்டது.

தம்மை வளர்த்துக் கொண்ட அம் முதலாளியம் தன்னுடைய செல்வச் செழிப்பின் குவியலை மேலும் மேலும் உயர்த்த, தமக்குச் சார்பான அரசு இயந்திரத்தை உருவாக்கிக் கொண்டு, அல்லது தாமாகவே அரசாக அமைந்து கொண்டு, தன் விரிவாளுமையைச் செய்யத் தொடங்கியது.

முதலாளிய ஆளுமையால் அதன் கீழ் அடிமைப் பட்டுக் கிடந்த தொழிலாளர்கள் பிறநாட்டு முதலாளியத்தின் அஃதாவது பிற நாட்டு முதலாளியின் விரிவாளுமையின் காரணமான அவ்வல்லாளுமையின் அழுத்தத்தின் காரணமாகவும் நசுங்கி உயிர்ப்பித்துக் கொண்டிருப்பது இன்றைய கண் கூடு.

இந் நிலையில் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் அந்த அந்த ஆளுமை ஆற்றல்களினால் அடிமைப் பட்டிருந்த பெரும்பான்மை மக்கள், தங்கள் விடுதலைக்காகத் தம் சார்பாளர்களை அணுக்கப்படுத்திக் கொண்டு அவ் வாளுமை ஆற்றல்களை எதிர்த்துப் போராடுவது என்பது இயல்பும், காலத்தின் கட்டாயமும் ஆக உள்ளது.

எனவே, ஒவ்வோர் அடிமைக் குமுகமும், தம் அடிமைத் தனத்தை எதிர்த்துப் போராடவேண்டிய நிலையில் தம் எதிரியை இனங்காண்பது என்பது இன்றியமையாதது ஆகும்.

எதிரியை இனங்காண்பது எளிதா?

— ஆம், இப்படி ஒரு கேள்வி கேட்கப் பட வேண்டிய அளவு சிந்திக்க வேண்டிய இடம் அது வாக உள்ளது.

ஒவ்வொரு குமுகமும் பல்வேறு வகையிலான அடிமைத் தனங்களுக்குள் அமிழ்ந்து கிடப்பது இயற்கை.

அவ் வடிமைத் தனங்களில் எந்த ஆளுமையை எதிர்த்து முதலில் போராடுவதால், பிற ஆளுமைத் தனங்களை எளிமையாக முறியடிக்க முடியும் என்பதைக் கணக்கிடுதல் வேண்டும்.

எதிரி எப்போதும் தனிமைப் படுத்தப்படல் வேண்டும்.

எதிரியைத் தனிமைப் படுத்த வேண்டுமானால், சில அகநிலை எதிரிகளின் நட்புடனே மூல எதிரியை எதிர்க்க வேண்டிய கட்டம் பல நாடுகளுக்குப் பல பொழுது ஏற்பட்டது உண்டு. ஏற்படவும் செய்யும்.

எனவே எந்த எதிரி மூலமான எதிரி என்றும், அவ்வெதிரியுடன் போராட யார் யாரை நட்பு ஆற்றல்களாகக் கொள்ள வேண்டும் என்றும் மிகத் தெளிவோடு ஆராய்தல் வேண்டும்.

இன்றைய இந்திய நிலை:

— இவ் வடிப்படை வரையறையிலிருந்து, நாம் பார்க்கத் தொடங்குவோம்.

Scanned with CamScanner

இந்தியா ஒரு தேசமாக - இந்தியாவில் உள்ள மக்களிடம் திரித்துக் கூறப்படுகிறது.

இந்தியா ஒரு தேசம் இல்லை — என்பதும், சூழலின் இக்கட்டில் இந்தியா ஒரு நாட்டரசாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதும் அரசியல் பார்வை உள்ளவர்களுக்கு மட்டுமன்று; பொதுவானவர்களுக்குக் கூடத் தெரிந்த செய்தியே.

இந்தியா பல தேசிய இனங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ள ஒரு துணைக் கண்டமாக உள்ளதே அன்றி, இதை ஒரு தேசமென வரையறுக்க இயலாது.

இந் நிலையில், இன்றைய இந்திய அரசு, இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களையும் அடிமைப் படுத்திக் கொண்டுள்ளது,

— அது மட்டுமல்லாமல் அமெரிக்கா, சோவியத்து, பிற வல்லரசுகளின் துணையைக் கொண்டு, தன் அண்டை நாடுகளின் மீதும் விரிவாளுமை செய்துகொண்டுள்ளது.

1971 — இல் வங்கதேசத்தைப் பிரித்துத் தருவதாகக் காரணம் காட்டித் தன் விரிவாளுமைத் தளமாக அதை ஏற்றுக் கொண்டது அனைவரும் அறிந்ததே.

அதே போல், இன்று தன்னுடைய விரிவாளுமையை இலங்கைத் தீவின் மீது செலுத்தி அதையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

இந் நிலையில் வல்லரசுகளின் துணைக்கொண்டு தானும் ஒரு வல்லரசாக வளர்ந்து கொண்டிருக்கிற இத் துணை வல்லரசான இந்திய அதிகார வகுப்பே — இந்தியாவில் அடிமைப்பட்டுள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கும் முதன்மை எதிரியாக அமைந்துள்ளது என்பது வெட்ட வெளிச்சமானது.

எனவே,இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசிய இனமும் தன் மீதான இந்தியத் துணைவல்லரசின் ஆளுமையை எதிர்த்துப் போராட வேண்டுவது இன்றைக்கு மிக மிகக் கட்டாயமாக உள்ளது.

இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் நிலை:

இந்நிலையில் இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் ஒவ்வொன்றின் மீதும், அவ்வக் குமுகச் சூழல்களின் அடிப்படையில் இந்தியத் துணை வல்லரசின் ஆளுமைத்தனம் ஒவ்வொரு கோணத்தில் கணக்கெடுக்கப்படுகின்றது.

— பஞ்சாபின் விடுதலை எழுச்சிக்கான காரணிகள் அப்படியே அசாமில் இல்லை.

— அசாமின் விடுதலை எழுச்சிக்கான காரணிகள் அப்படியே வங்காளத்தில் இல்லை.

— வங்காளத்தின் விடுதலை எழுச்சிக்கான காரணிகள் அப்படியே தெலுங்கு நாட்டில் இல்லை.

— தெலுங்கு நாட்டின் விடுதலை எழுச்சிக்கான காரணிகள் அப்படியே தமிழ்நாட்டில் இல்லை.

ஆக, ஒவ்வொரு தேசத்தின்மீதான அடக்குமுறையின் அளவும், தன்மையும் அவ்வக் குமுகத்தின் வளர்ச்சிக்கேற்ப ஏற்ற இறக்கமும் மாறுபாடும் கொண்டவை.

இதன் அடிப்படையில் ஒவ்வொரு தேசமும், தன்னின் விடுதலைக்கான போராட்டத்தை ஒரே காலக்கட்டத்தில் முன்னெடுப்பது என்பது இயலாது.

அடிமைத் தனங்கள் அதிகம் கொண்ட ஓர் இனம், மிகக் குறைவான அடிமைத்தனங்கள் கொண்ட ஒரு தேசிய இனத்தின் எழுச்சிக்காகக் காத்திருந்து, ஓர் இந்தியப் புரட்சி செய்ய இயலாது.

அங்ஙனம் காத்திருந்து ஒரு புரட்சி செய்து அனைத்து உரிமையும் கொண்டு, தனித்தனி ஆட்சியுரிமை கொண்ட ஓர் இந்திய ஒன்றியததை அமைக்கவும் இயலாது.

அஃது உலகப் புரட்சியை ஒரே காலக்கட்டத்தில் செய்யத் திட்டமிட்ட டிராட்சுகிய சிந்தனையை ஒத்ததே ஆகும்.

மேலும், இந்தி மொழி வழிக் குமுகத்தின் தேசிய இன மக்களின் பெரும்பகுதி சார்பு நிலையிலேயே இந்திய அரசு உள்ள இன்றையச் சூழலில்,-

— இந்தி தேசிய இன மக்கள் இவ் விந்தியத் துணைவல்லரசை எதிர்த்துப் போராடாத வரையில், அதனோடு, பிற தேசிய இன மக்களும் இணைந்து போராடுவது என்பது பகற்கனவே.

எனவே, எந்த வகையில் பார்த்தாலும், ஓரிந்தியப் புரட்சி என்பது எண்ணியும் பார்க்க இயலாத, புரட்சிக்கே முட்டுக் கட்டையாக அமைகிற சிந்தனையாக உள்ளது — என்பது அல்லாமல் பிற இல்லை.

எனவே, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தேசிய இனமும், தன் தன் மக்களின் விடுதலைக்கான புரட்சியைத் தனித்தனியே எடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ள நிலை தெளிவாகிறது.

தமிழ்க் குமுகத்தின் இன்றைய நிலை:

இவ்வடிப்படை விளக்க நிலைகளிலிருந்து தமிழ் நாட்டு மக்களின் விடுதலையைப் பற்றிய ஆய்வை நாம் மேற்கொள்ளல் தேவை.

அப்படிப் பட்டதான ஆய்வை நாம் மேற்கொள்ளுகிற பொழுதே, தமிழ்நாட்டு மக்களின் எதிரியும் இரண்டகி(துரோகி)யும், நண்பனும் சரியான அளவில் வரையறுக்கப்பட முடியும்.

தமிழ்க் குமுகம் இன்றைக்குப் படி ஏற்ற இறக்க நிலையின் குமுகக் கட்டமைப்பான சாதியக் கட்டமைப்பில் ஒருபகுதியாகவும்.

Scanned with CamScanner

ஏற்றத் தாழ்வான பொருளியல் வளர்ச்சியைக் கொண்டதாகவும், உதிரித் தன்மையான நிலையில் அரசியல், பொருளியல் உதிரி உழைப்பாளர்களைக் கொண்டதாகவும் உள்ளது.

ஒரு புறம், வல்லாளுமை நாட்டின் முதலாளிகளின் மூலப் பணத்தின் முதலீடுகளினால் தமிழ் நாட்டு மக்களின் உழைப்பும், கனிவளங்களும் சுரண்டப்படுகின்றன.

மறுபுறம், இந்தியத் துணை வல்லரசின் முதலாளிகளினால் தமிழ் நாட்டு மக்களின் உழைப்பும் கனிவளங்களும் பிற செல்வங்களும் கொள்ளையடிக்கப் படுகின்றன.

இவ் வல்லரசின் முதலாளிகளும், அவ் வல்லரசின் கூட்டுத் துணையோடு இன்றைய இந்தியாவில் உள்ள முதலாளிகளுமே — இன்றைக்குத் தமிழ் நாட்டின் மிகப் பெரும் செல்வத்தைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

ஒப்பீட்டளவில், இந்தியாவில், அரிசி விளைச்சலில் மூன்றாவது இடத்தையும், சர்க்கரை விளைச்சலில் இரண்டாவது இடத்தையும், காய்கறி விளைச்சலில் முதல் இடத்தையும், ஏலம், மிளகு - போன்ற விளைச்சலில் இரண்டாவது இடத்தையும் தேயிலை, குளம்பி (காபி)- விளைச்சலில் இரண்டாவது இடத்தையும் பெற்று, நில விளைச்சலிலும், கனிவளங்களிலும் சரி,

தன்னிறைவு கொள்ளுகிற வகையில் உள்ள நம் தமிழ் நாட்டின் வளங்கள் அனைத்தும் இன்றைக்கு மேற் குறிப்பிட்ட சுரண்டல் காரர்களால் கொள்ளையடித்துச் செல்லப்படுகின்றன

இந்த அளவு விளைச்சலும் கனிவளமும் நிறைவுற்று இருக்கிற பொழுது கூட, தமிழ் மக்கள் ஏழ்மையிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர்.

இங்ஙனம் மூழ்கிக்கிடப்பவர்கள் தாங்கள் எந்த வகையிலும் ஒன்று சேர்ந்து போராடாதபடி மேலே குறிப்பிடப்பட்டவரின் நலனுக்கான இந்திய அரசு, நம் மக்களின் ஒன்று சேர்வுக்கான வழிகள் என்னென்ன உள்ளனவோ அனைத்தையும் அடைத்து வைத்துள்ளது.

பாட்டாளிகளாக ஒன்றிணையாதபடி, இன்றைக்கு இந்தச் சுரண்டல் அரசுச் சார்புக் கட்சிகளே தொழில் கழகங்களைக் கட்டித் தொழிலாளர்களின் உணர்வுகளை, எழுச்சிகளை முனை மழுங்கடித்துக் கொண்டுள்ளது. (தொடரும்)

ப. நெடுமாறன் 'தமிழர் தேசிய இயக்கம்' கண்டிருக்கிறார் இந்தவுணர்ச்சியைத் 'தமிழக முன்னேற்ற முன்னணி'யும் பெற்றிருக்கிற தென்றால், இவர்கள் 'தமிழன்' என்ற இனவுணர்வை முதல் கட்டமாக வளர்ப்பார்களா?

பறம்பை அறிவன்.

சாதி அரசியல்!

சாதிகளை முடிவுக்குக் கொண்டு வர முடியுமா? தேர்தல் அரசியல் அவற்றிற்குத் தீனி போட்டுக் கொண்டல்லவா உள்ளது? சாதிகளைச் சீர்திருத்திகள், இடவொதுக்கீடு, கல்வி முன்னேற்றம், பொருளியல் சமவுரிமை, பண்பாட்டு வளர்ச்சி என்ற போர்வைகளால் பாதுகாக்க முன்வருகிறார்கள் என்றே கூறலாம்.

தமிழ் நாட்டில் 'வேளாளர்' என்று கூறிக் கொள்ளும் சாதிகள் பல. அவற்றில் 16 உட்பிரிவுகள் இணைந்து ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்தியுள்ளன.

இந்தக் கூட்டமைப்பில் சேர்ந்த பிரிவுகளைத் தினமணிச்செய்தி பின்வருமாறு கூறியுள்ளது.

1. சோழிய வேளாளர் 2. ஆறு நாட்டு வேளாளர் 3. சைவ வேளாளர், 4 கார்காத்த வேளாளர் 5. பாண்டிய வேளாளர் 7. கன்னியாகுமரி வேளாளர் 8. துளுவ வேளாளர் 9. சேனைத் தலைவர் 10. கொடிக்கால் வேளாளர். 11. குக வேளாளர். 12 ஆரிய வேளாளர் 13 தொண்டை மண்டல துளுவ வேளாளர். 14. கொங்கு வேளாளர்.

இவற்றில் விடுபட்ட 'வேளாளர்' பட்டியல் எத்தனையோ?

தேவேந்திர குல வேளாளர், குறிஞ்சி வேளாளர் என்று கூறிக் கொள்பவர்களை இந்த வேளாளர் கூட்டமைப்பு ஏற்குமா? ஏற்காது. ஏனெனில், இவர்கள் 'பள்ளர்; குறவர்' என்ற தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள்.

அந்தக் காலத்தில் மறைமலையடிகள் இந்த வேளாளர் சாதியில் 'சம்பந்தி' உணவு கொள்ள வற்புறுத்தினார் எனக் கேள்விப்பட்டுள்ளேன்.

இன்று, கி. ஆ. பெ. விசுவநாதன் வேளாளர் கூட்டமைப்பைத் தொடக்கி வைக்கிறாராம். ''சாதிகள் இல்லையடி பாப்பா,'' ''தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா'' என்று 'கூச்சல்' இனியும் போடத்தான் வேண்டுமா? — இந்தக் கேள்வியிலும் 'ஞாயம்' இருக்கத்தான் செய்கிறது?

குன்றக்குடி அடிகளார், தமது 'ஆதின' உரிமைக்குக் கார்காத்த வேளாளர் என்பதெல்லாம் கூடாது. ஒரு 'துறவி' ஒரு வேளாளர் பிரிவில் உரிமைபெற வாய்ப்பு இருத்தல் வேண்டும் எனக் கூறினாராம. அவர்தம் 'உள்நோக்கம்' குறித்து ஐயப் படுகிறவர்கள் உண்டு. இவரும்.... தேவேந்திர, குறிஞ்சி வேளாளர்களை 'வேளாளர்' என்று கூறும் துணிச்சல் உடையவர் அல்லர்!

மதுரை ஆதினம் கூட இத்தகைய கூட்டமைப்பை வரவேற்கக் கூடும். இவர்களெல்லாம் 'உள்சாதி' ஒற்றுமைப் பு-ர-ட்-சி யை வரவேற்பவர்கள் எனறே கருதுகின்றேன்.

(தொடர்ச்சி முன்பத்தி)

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

வல்லரசியங்களும் தேசிய இனப் போராட்டங்களும்!

இங்குப் பொதுமை எனும் பெயரில் 'புரட்சி' பட்டங்கட்டிக் கொண்டு உலா வரும் போலிகள் இந்தியாவின் அரசியலமைப்பு பிற்போக்குத் தன்மை உடையது என்றும், இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை முற்போக்குத் தன்மை உடையதென்றும் — இந்திய ஆளும் வகுப்பின் இன (வர்க்க) உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் — கூறிப் பிதற்றி இந்தியத் துணை வல்லரசின் — தில்லி நடுவண் அரசின் — தேசிய ஒடுக்கல்களையும், தேசிய இன ஒடுக்கல்களையும் நயன்மைப் படுத்தி "இந்திய தேசிய ஒருமைப்பாட்டு" முதலாளியத் தாவடி(முகாம்)களோடு கூடிக் கைகோத்துக் கொண்டு களி நடனம் புரிகின்றனர். அவ்வகையிலேயே ஈழத் தமிழ் மக்களின் மீது இந்திய வல்லரசு தொடுத்துள்ள போரையும் நயன்மைப் படுத்த அலைகின்றனர்.

உண்மையில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை படு பிற்போக்குத் தன்மை உடையது. தரகு முதலாளியத் தன்மையுடையது. வல்லரசுகளுடன் கைகோத்துக் கொண்டு உலா வரும் பாங்குடையது. இந்தியத் தில்லியின் வல்லரசுத் தன்மையைப் பாதுகாக்கக் கூடியது. உலக வல்லரசுகளின் நலன்களுக்காகவே "இந்திய தேசியம்" கைகட்டிப் பணி புரிகிறது. நடுவண் அரசாக வீற்றிருக்கும் தில்லியரசு தனது வல்லரசுத் தன்மையைக் காத்துக் கொள்வதற்காகவே 'இந்திய தேசிய ஒருமைப்பாடு' எனும் முழக்கம் முன் வைக்கப்படுகிறது. இம் முதலாளியக் கோட்பாட்டிற்குப் போலிகளும் புரட்சிகளும் துணை போகின்றனர். **இவர்கள் இங்கு முன் வைக்கும் "இந்திய தேசியம்" தேசம் எனும் பெயரிலமைந்த 'ஒரு பாசிச'க் கொடுமைக் கருத்து ஆகும்.**

இந்நிலையில் தமிழகப் பொதுமையர்களாகிய நாம் இந்தியத் துணை வல்லரசை உடைத்தெறிய வேண்டும். அதற்காக இந்தியாவில் பிணைக்கப்பட்டுள்ள தேசங்களோடும், தேசிய இனங்களோடும் இணைந்து **அனைத்துத் தேசங்களுக்கும் தேசிய இனங்களுக்கும் தன்னுறுதி (சுய நிர்ணய) உரிமை** என்னும் புரட்சிநிலைப் போர் முழக்கத்தை முன்னெடுக்க வேண்டும். தமிழகத்தின் தன்னுறுதி அமைப்பு உரிமை என்னும் அடிப்படையில் தமிழக விடுதலைக்கான கருவிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

தமிழகப் பொதுவுடைமையர்களாகிய நாம் வெறுமையில் நின்று போராடவில்லை. "தமிழ்த் தேசம்" எனும் தனித் தன்மையில் நின்று போராடுகிறோம். நாம் வல்லரசுக் காலவூழியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். **வல்லரசை - வல்லரசியத்தை உடைத்தெறிவதே நமது காலத் தலையாய பணி.** இந்திய வல்லரசை உடைத்தெறிவதே இந்தியாவில் வாழும் தேசிய இனங்களின் நல்வாழ்விற்கான தீர்வாக இருக்க முடியும். வல்லரசுகளின் தலையீட்டை வெட்டியெறிவதன் மூலமே தமிழக மக்களும் பிற தேசிய — இன — மக்களும் இந்திய வல்லரசுக்கெதிராகத் தமது தன்னுறுதி அமைப்பு (சுய நிர்ணய) உரிமையைப் பெற முடியும். இந்திய வல்லரசை நிலைகுலையச் செய்வதன் மூலமே ஈழத் தமிழ் மக்கள் தங்களுடைய தன்னுறுதி அமைப்பு (சுய நிர்ணய) உரிமையை மீளப் பெற முடியும். தமிழீழ மக்களுக் கெதிராக இந்திய வல்லரசு தனது கூலிப் படைகளை ஏவிப் போர் தொடுத்து நடத்திவரும் இந்நிலையில் **தமிழகத்தின் தனிநாட்டு உரிமைக்கான விடுதலைப்போரே தமிழீழத்தின் விடுதலைக்கான தீர்வாக இருக்க முடியும்.**

தமிழக — இந்தியப் பொதுவுடைமையரே,

- இந்தியாவில் வாழும் தேசிய இனங்களின் தன்னுறுதி அமைப்பு(சுய நிர்ணய) உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுப்போம்.
- தமிழீழத்தின் மீதான இந்தியத் தில்லி வல்லரசின் படைத்துறைக் கொடுமைப் போக்கின் (இராணுவ பயங்கரவாத) தேசிய ஒடுக்கல் போரை முறியடிப்போம்.
- இலங்கையை இந்தியத் தில்லி வல்லரசின் புதுக் குடியமர்த்த(காலனி) அடிமை நாடாக்கும் இந்திய — இலங்கை உடன்பாட்டைக் கிழித்தெறிவோம்.
- இந்திய மக்கள் பொருளியலைப் படைத்துறைமயமாக்கி வரும் தில்லியின் இந்திய வல்லரசு வெறிக்குப் புதை குழி அமைப்போம்.
- பல தேசிய இனங்களை ஒடுக்கி இந்தி(ய) ஒருமைப் பாட்டைத் திணிக்கும் தில்லி இந்திய வல்லரசினைத் தகர்த்தெறிவோம்.
- வல்லரசுக் கொடுமைகளுக்கு வலை விரிக்கும் இந்திய அரசியலமைப்புத் தேர்தல் சூழலுக்கேற்ப நடக்கும் கொள்கையை வெட்டி வீழ்த்துவோம்.
- தில்லி நடுவண் அரசின் உளவுப் படைகளாக இயங்கும் பேராயம் மற்றும் போலிப் பொதுவுடைமைக் கும்பல்களை விரட்டியடிப்போம்.
- தமிழக மக்களின் நலன்களைக் காட்டிக் கொடுத்து வரும் திராவிடத் தேர்தல் கும்பல்களைப் புறக்கணிப்போம்.

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, இதையும் விட இழிவான நிலை என்னதெரியுமா? அரசு ஒவ்வொரு நாளும் 20 கோடிஉருபா கடன் வாங்குகிறது. அதுவும் போதாதென்று நாள்தோறும் 20 கோடி உருபாவுக்குத் தாள் பணத்தை அச்சிட்டுக் கொள்கிறது. இந்த நிலை எங்கே போய், எப்படி முடியுமோ யாருக்குமே தெரியாது.

இப்படி நம்மிடையே பொதுமக்களில் ஒருவர் இருந்தால், அவரை நாம் யாருமே மதிக்க முடியாது. மதிக்கா'விட்டாலும் தாழ்வில்லை. மிக மிக இழிவாகவே கருதுவதுடன், அப்படிப்பட்ட ஊதாரிக்கு உதவி செய்ய நாம் யாருமே முன் வர மாட்டோம்.

இவ்வாறு கடன் பட்டுக் கடன்பட்டு, அளவுக்கு மீறித் தாள் பணம் அச்சிட்டு அச்சிட்டு அரசு என்ன ஊதாரித்தனமான செலவுகளைச் செய்து வருகிறது என்கிறீர்களா?

அடிக்கடி அமைச்சர்களின் 'சுரிசுகா' கலந்தாய்வுகள், இலட்சத் தீவுக்குப் போனது போன்ற மகிழ்வுலாக்கள் (உல்லாசப் பயணங்கள்), கடன் கொடுப்பு விழாக்கள் (மேளாக்கள்), கலை விழாக்கள், விளையாட்டு வேடிக்கைகள், தேவையற்ற விஞ்ஞன ஆரவார ஒளி, ஒலி பரப்புகள், வெளிநாட்டு, உள் நாட்டுச் சுற்றுலாக்கள், திறப்பு விழாக்கள், அடிக் கல் நாட்டு விழாக்கள், தேவையற்ற வானூர்திப் பயன்படுத்தங்கள் போன்ற நூற்றுக் கணக்கான ஆடம்பர, ஆரவாரச் செலவுகள்.

இன்று அரசிடம் கைமுதலே இல்லை. 40,000 கோடி உருபாவுக்கு மேற்பட்ட கடன்கள். இதை ஈடுகட்ட அதனிடம் சொத்துகள் இல்லை. மேலும் மேலும் வட்டி சேர்வதாலும், கடன் வாங்கிக் கொண்டே இருப்பதாலும் இந்தக் கடன் பொறுப்புகளிலிருந்து அரசு என்றைக்குமே மீள முடியாது. இதை ஆட்சியில் ஈடுபட்டுள்ளவர்கள், உண்மையான நாட்டுப் பற்றுடனும் மக்கள் மேல் அன்புடனும் எண்ணிப் பார்த்தால் அவர்கள் பொழுது போக்கவும் மகிழ்ச்சிக்காக இங்கு மங்கும் அலையவும் தேவையே இராது.

ஆனால் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் வேலை செய்யும் நேரங்களை விட, தாள்பணம் அச்சிடும் அச்சுப் பொறிகளே அதிகம் உழைக்க வேண்டி உள்ளன.

இந்த அரசு தனியார் துறைகளில் உள்ளதைப் போல் ஒரு தொழில் நிறுவனமாக இருந்தால் அதற்கு வைப்பகங்களிடமிருந்து கடன் வாங்கத் தகுதி இருக்காது. அது நொடிந்த (திவாலான) நிறுவனம் என்று அறிவிக்கப் பட்டிருக்கும். இறுதியில் மிகவும் தாழ்ச்சியான ஆளுமைக்கு அதன் ஆட்சிக் குழுவையே மாற்ற வேண்டியிருக்கும்.

(இது — '*தினமணி*'யில் கடந்த மார்ச்சு 14-இல் வெளிவந்த **எசு. குருமூர்த்தியின்** கட்டுரையைத் தழுவி எழுதியது.

இந்தியாவின் நாலு எதிரிகள்

-- (தினமணிக்கு ஒரு மறு(ப்பு) மொழி!)

'*தினமணி*'யின் (16-6-88) ஆசிரியவுரை நமக்கு எப்போதும் அதிர்ச்சியளிப்பதில்லை. ஒரு 'வழக்கை', விளக்கெண்ணெயாக மாற்றுவதில் தினமணிக்கு நிகர் தினமணியே! ஆகவே, இந்த 'இந்தியாவின் நாலு எதிரிகள்' ஆசிரியவுரையிலும் அதிர்ச்சி, மகிழ்ச்சி எதுவுமில்லை! விளத்தமான இதழ் 'தினமணி'! எனவே, அதன் விளக்கங்கள் நமக்குச் சில எச்சரிக்கை யுணர்வுகளைத் தந்துள்ளன.

தினமணியின் 'பாவனை'யில் மக்கள் எதிரிகளாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளவர்கள் சீனு, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா, பிரபாகரன்! ஆகவே, இந்த நாலும் 'இந்தியாவின் எதிரிகள்' எனலாம்!

'தினமணி' கூறி மறுக்கின்ற இந்த 'எதிரிகள்' பற்றிப் பல்வேறு கருத்துகள் எழலாம். அவை பற்றியெல்லாம் ஆராய நமக்கு 'அறிவு' போதாது தான்! ஆனால், 'திருடனை'ப் புரிந்து கொள்ள முடியா விட்டாலும், 'திருட்டுக்கொடுத்தவன்', தன் களவு போன பொருள் பற்றி நன்கறிந்தவனாகவே இருப்பான். 'எத்தனைத் திருகுதாளஞ் செய்தபோதும், திருடன் பிறர் உடைமையைத் தனதாகச் சொல்லிய போதும், உரியவனை ஏமாற்றுதல் இயலாதன்றோ? ஆக, வந்தேறியவரும், கள்வரும், சுரண்டல் பேர்வழிகளும் கூறும் 'நலஞ்செய்யும் கருத்துகள்' ஏற்புடையன ஆதலில்லை.

'தேர்தல் கூச்சல்'களாக மேற்கூறிய நான்கு எதிரிகள் பற்றிய கருத்துப் பரப்பல்களைத் 'தினமணி' கருதுகின்றதா என்பதைத் தெளிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால், இவற்றுக்கும் மேலாக 'இந்தியா'வைக் காப்பாற்றுவதே 'தினமணி'யின் 'நல்ல' நோக்கம் எனலாம்!

"மதம், மொழி, இனம் (சாதி) பற்றிய வெறிகளும் ஊழலுமே'' நாலு எதிரிகள் என்கிறது.

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

- O நீண்ட கால விடுதலைப் போர் மூலம் தில்லி வல்லரசாளர்களை, குடியமர்த்த, ஆளுமை வெறிக் கும்பல்களைத் தமிழக — இந்திய மண்ணிலிருந்து விரட்டியடிப்போம்.
- O ஈழத் தமிழர்களின் தன்னுறுதி அமைப்பு (சுய நிர்ணய) உரிமையை — தமிழீழத்தை ஏற்புச் செய்வோம்.
- O தமிழக மக்களின் தனிநாட்டுரிமைக்கான கருவியேந்திய விடுதலைப் போரை முன்னெடுப்போம்.

தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம் ஓங்குக! தமிழீழம் மலர்க! தமிழகம் வெல்க! 0

Scanned with CamScanner

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினமணி! இவை 'நாட்டை அச்சுறுத்தி வருவதாலேயே எதிரிகளாகும்' என்பது தினமணியின் கருத்து!

1. மதம், 2. மொழி, 3. இனம்(சாதி) 4.ஊழல்

இவற்றில் இனம் என்பதும் சாதி என்பதும் ஒன்றெனப் பிறழ வுணர்த்தப்பட்டுள்ளது.

மதம், ஊழல் பற்றிய எதிர்ப்பு விளங்கக் கூடியதே! 'மொழி'யை எதிர்ப்பதன் நோக்கம் விளங்கவில்லை.

'தினமணி'யின் கருத்துகள் ஒரு சார்புடையனவே. அவற்றில் 'பொதுத்தன்மை' இருப்பதாகத் தோன்றும் அதுவும் உண்மையில்லை. எவர்கூறும் கருத்திலும் 'சார்பு' தான் இருக்கும் என்பதுதான் உண்மையாகும்!

'மக்கள் நலன்' என்கிறபோது, 'தேசநலன்' என்பது 'ஆள்பவர்' நலனுகவே இருக்கும் என்பதை நாம் உறுதியாகப் புரிந்து கொண்டிருத்தல் வேண்டும்.

— பறம்பை அறிவன்.

நடிப்பவரைத்தான் உலகம் நம்புதய்யா!

பாவலர்-- தமிழ்க்குமரன், ஈரோடு

தமிழினத்தின் உரிமைமுர சாய்ஒ லித்த
தன்னேரில் லாஏடு தென்மொ ழிக்கே
அமிழாத உணர்வுடனே ஆக்கஞ் சேர்க்க
அம்தமிழர் தவறியதால் அய்யா நொந்து
நிமிரவழி யில்லையிந்தத் தமிழ ரென்று
நெஞ்சுபொறுக் காதுரைத்து நிறுத்து கின்றார்!
உமியாமோ பதராமோ நீங்க ளெல்லாம்
உணர்ச்சியற்ற மரக்கட்டை யாமோ சொல்வீர்!

மண்ணுரிமை பேணவந்த தென்மொ ழிக்கே
வாரிவழங் கா(து)எதற்கு வழங்கு வீரோ?
கண்மயக்கி வருகின்ற கட்சி கட்கா?
கரவெண்ணப் பகைவர்க்கா? நம்மு டைய
பண்பாட்டைச் சிதைத்தழித்துத் தமிழ கத்தின்
பழம்பெருமை தனைக்குலைக்கும் பரத்தை [யர்க்கா?
புண்பட்டுப் போனதேஅய் யாவின் உள்ளம்!
புழுவாகத் தானிங்கே நெளிவீர் நீங்கள்!

நடிப்பவரைத் தான்உலகம் நம்பு தய்யா!
நாடகமா டத்தெரியா(து) அய்யாவுக்கு
படிப்பினைகள் போதாதா? ஒருவ னாலே
பட்டதெல்லாம் போதாதா? தமிழீ ழத்தில்
துடித்தெழுந்த புலிகளுக்கே உதவு வான்போல்
தொழில்வல்லான் மிகத்திறமை யாய்நடி த்துக்
கொடிகட்டி யாண்டகுலப் புகழ்சி தைத்துக்
கூலிபெற்றுக் கொண்டடகு வைத்தான் [நாட்டை!

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்திரமாகக் கேட்கப் பெற்ற விலையாகும்'' என்று திரு. சீனிவாசன் கூறுகிறார்.

இவையன்றி, திரு, சீனிவாசன், பெங்களூரில் உள்ள பார்ப்பன இயல்பியல் பேராசிரியர் ஒருவரைப் பற்றியும் ஒரு செய்தியைக் குறிப்பிடுகிறார்.

அப் பார்ப்பனப் பேராசிரியர் வகுப்பறையில் நியூட்டனின் புவியீர்ப்பு ஆற்றலைப் பற்றிப் பாடங் கூறி விட்டுப் பிறகு மாலையில் தாம் ஆற்றிய ஒரு சொற்பொழிவில், இந்த நிலம் எட்டு யானைகள் தாங்குவதால் நிலை நிற்பதாகக் குறிப்பிட்டார். இந்தச் சொற்பொழிவைக் கேட்ட அவர் மாணவன் ஒருவன் தன் ஆசிரியரின் இரட்டை வகையான நடவடிக்கையைக் கண்டு வியப்படைந்து, அவரிடம் அவரின் "உண்மையான கொள்கை எது, நியூட்டனின் கருத்தா, அல்லது எட்டு யானைகளின் கருத்தா?" என்று கேட்டான்; அவ்வியல்பியல் (Physics) பேராசிரியர் இக்கேள்வியால் அதிர்ச்சியுற்றார். பின்னர், அவர் அவனிடம், "நான் வகுப்பறையில் சொல்லித் தருவது என் பிழைப்புக்கான கருத்து. வெளியே சொற்பொழிவில் கூறுவது தாம் எதை உண்மையாக நம்பிக் கொண்டிருக்கின்றேனோ, அந்தக்கருத்து என்று கூறியதாக திரு. சீனிவாசன் குறிப்பிடுகிறார்.

அவர் மேலும் குறிப்பிடுவதாவது. "இப்படிப் பட்ட நிலைதான், இந்தியாவில் அறிவியல் உணர்வைப் பரப்புகின்ற அறிஞர்களின் நிலையென்றால், கடவுள்தான் இந்தியாவைக் காக்க வேண்டும். இந்த நாட்டில் அறிவியலை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் உணர்வு பரவுதற்கு நீண்ட காலம் ஆகும் என்று தெரிகிறது.

— பெங்களூர் 'இந்தியன் எக்சுபிரசு' திசம். 13.

(இந்தச் செய்தி 'தலித் வாய்சு' என்னும் சன. 1-15, 1989-ஆம் இதழில் ஆசிரியரின் பின்வரும் குறிப்புடன் வெளியிடப்பெற்றுள்ளது.)

"ஆரியப் பார்ப்பனர்கள், இந்தியாவில், அறிவியலையும், தொழிலியலையும் அவர்களின் வாழ்வியல் நன்மைக்காகவே பயன்படுத்துகிறார்களே தவிர, அறிவியல் உணர்வு பரவக் கூடாது என்பதே அவர்களின் கருத்தாக உள்ளது."

(முன் பத்தித் தொடர்ச்சி)

முப்பதன்ன ஆண்டுகள்நம் விடுத லைக்காய்
முழுமூச்சாய்ப் போராடி வந்த அய்யா
கப்பியதாம் இருளகற்றித் தமிழ கத்தில்
கதிரொளியைப் பாய்ச்சவந்த ஒளிப்பி ழம்பு!
ஒப்பில்லா அவர் தொண்டுக் குதவி நீங்கள்
ஓர்ந்துரிமை மொழி, நாட்டை மீட்காவிட்டால்
எப்போதும் எழுந்துநிற்க முடியா தென்பேன்
இதையுணர்ந்தும் பங்கினைநீர் செலுத்தி [மீள்வீர்!

Scanned with CamScanner

தொடர்: 6

இதழ் 111-இன் தொடர்ச்சி.

தமிழகத்தில் புதிய குடியரசுப் புரட்சி !

புதுகுடியிருப்புச் சுரண்டலுக்காகக் காடுகள் அழிக்கப்பட்டு இயற்கைச் சூழ்நிலையும் மலைவாழ் மக்கள் வாழ்க்கையும் அழிந்து வருகின்றன. இம் மக்களின் கலைப்பண்பு மரபு முறையிலான பொருளியல், உரிமை அழிக்கப்படுகின்றன. நிலத்துடன் பரம்பரையாக இம்மக்களுக்கு இருந்த உறவை அரசு அடவித்துறை (வனத்துறை) மூலமாக அறுத்து நிலத்திலிருந்து இம் மக்கள் வெளியேற்றப்படுகின்றனர். தங்கள் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள இம் மக்கள் போராட்டம் அரசுக்கு எதிராக வளர்ந்து வருகின்றது. இம் மக்களின் போராட்டங்களைத் தமிழக விடுதலைப் போராட்டத்துடன் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

தேசிய கால்நடைகளை அழித்து **வெண்மைப் புரட்சி** மூலமாக வெளிநாட்டுக் கால்நடைகளை இறக்குமதி செய்து, மருந்து, தொழில் நுட்பம், தீவனம் மூலமாகக் கடும் சுரண்டலை நடத்துகின்றன. கறவை மாடு வாங்க வைப்பகக் கடன் மூலமாகக் கடுமையான வட்டி சுரண்டல் மூலமாகக் கொள்ளையடிக்கின்றன. இதே போன்று கோழி வளர்ப்புத் திட்டத்திலும் மருந்து, தொழில் நுட்பம், தீவனம், மூலமாகவும், வைப்பகக் கடன் வட்டி மூலமாகவும் கொள்ளையடிக்கின்றன.

மரபு வழியான மீன்பிடி தொழிலை **நீலப்புரட்சி** என்ற புதுக்குடியேற்றச் சுரண்டல் முறையில் விசைப் படகைப் புகுத்திப் பேரளவு மீனவரை வறுமைக்கு உள்ளாக்கியுள்ளது. அரசு கடன் வட்டி சுரண்டலாலும் வாழ்க்கைத் தரம் அழிந்து வருகின்றது. தேசியத் தேவைக்கான கைத்தறி உருவாக்கத்தை அழித்து அனைத்து நாட்டுச் சந்தைக்கான உருவாக்கமாக மாற்றி உருவாக்க விற்பனை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டும், செயற்கைப் (ரேயான்) பட்டுகளை உருவாக்கம் செய்தும்,விசைத்தறி, தானியங்கி விசைத்தறி ஆகியவற்றைப் புகுத்தியும் கைத்தறியை அழித்து வருகின்றன. நடுவண் அரசின் புதிய துணிக்கொள்கை வெளி நாட்டு முதலாளிகள் கொள்ளையடிக்கவே கொண்டு வரப்பட்டுள்ளது. பெருவாரியான பஞ்சாலைகளை இழுத்து மூடி இலக்கக்கணக்கான தொழிலாளர்களை வெளியேற்றி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கியுள்ளது.

குமுகத்தில் இளைஞர்கள் ஒரு பிரிவினமாக் (வர்க்கமாக) அமையவில்லை என்றாலும் பல்வேறு பிரிவினங்களில் வந்துள்ள இவர்கள் தனித்தன்மை வாய்ந்த குணத்தின் காரணமாகப் புதுக்குடியிருப்பு வல்லாண்மை முறையின் விளைவாக நாளுக்கு நாள் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் நேரடியாகத் தாக்கப்படுகின்ற காரணத்தினால் வல்லரசு எதிர்ப்புத் தன்மை வாய்ந்த தேசியப் போராட்டத்தில் இளைஞர்கள் சிறப்பான பங்கேற்க முடியும்.

இன்றைய கல்வி முறை,வல்லரசுக்கும், ஆளும் பிரிவினத்துக்கும் ஊழியம் செய்வதாக இருப்பதால் தமிழக எதிர் காலத்துக்கும் மாணவர்கள் எதிர் காலத்துக்கும் ஒவ்வாததாக இருப்பதாலும் தேசியத் தன்மை வாய்ந்த அறிவியல் முறையிலான கல்வி முறைக்கான போராட்டம் இயற்கையாகவே தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்துள்ளது. இந்த அடிப்படையில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மாணவர்கள் பெரும் பங்காற்ற முடியும்.

குமுகத்தில் சரி பாதியான பெண்கள் மதப் பிரிவு அடிப்படையிலான சுரண்டல் வல்லாண்மைக்கும், உட்பட்டு இருக்கும் அதே வேளையில் பெண்கள் ஆண் வல்லாண்மைக்கும் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். இக் கொடுமைகள் குமுக அமைப்பு முறையை ஒட்டியுள்ளதால், இக்குமுக மாற்றத்துக்கான போராட்டத்தில் முதல்படி என்ற முறையில் புதுக்குடியிருப்பு வடிவத்தை ஒழிக்கும் புதிய குடிநாயகப் புரட்சியில் பெண்கள் தனி அமைப்புகளை உருவாக்கிச் செயலாற்ற முடியும்.

சாதி மக்களைப் பிளவுபடுத்தி வல்லரசு நாடுகள் சுரண்டுவதற்கு அடிமைத் தளமாக வைத்துள்ளது. தமிழ் இனத்தை நிலையான அடிமையாக்கக் கருவியான காரணங்களில் ஒன்றாக இருக்கிறது. பொதுவாக எல்லாச் சாதி உழைக்கும் மக்களும் வல்லரசுகளாலும் இந்தியா ஆளும் பிரிவினத்தின் சுரண்டலுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதால், இப் பிற்போக்குப் பிரிவினத்துக்கு எதிரான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலமாக வளர்ந்து வரும் தேசியச் சிந்தனையின் அடிப்படையில் சாதி வேறுபாடுகளையும் எண்ணங்களையும் இல்லாமல் போகச் செய்ய முடியும். அதனால் சாதி ஒழிப்புக்காகக் கலை,பண்பாட்டுத் துறைகளில் நடத்த வேண்டிய போராட்டங்கள் இயல்பாகவே புதிய குடிநாயகப் புரட்சியுடன் இணைக்கப்பட வேண்டும். சாதி அடக்கு முறைக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களை நடத்துவதுடன் அதற்குத் தேவையான தனி அமைப்புகளையும் கட்டி அமைக்க வேண்டும். (தொடரும்)

அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

Scanned with CamScanner

ஏன் பெற்றாய்?

பாவலர் சின்னப்பனர். கொம்மக்கோவில்

வள்ளுவரை வெண்தாடி வேந்தர் தம்மை
மறத்தமிழர் புரட்சிப்பா வேந்த ரோடு
தெள்ளுதமிழ்ப் பாவலரே றென்னும் வீர
சீயத்தைப் பெற்றெடுத்த தமிழ்த்தாய் நாடே
எள்முனையும் தன்மானம் மொழியின் மானம்
இனமானம் வெட்கமிவை இல்லா தோராய்க்
கொள்ளையராம் வடவருக்கே இனத்தைக் காட்டிக்
கொடுக்கின்ற இரண்டகரை நீ, ஏன்
பெற்றாய்?

தாய்த்தமிழைத் தாயினத்தைத் தம்தாய் நாட்டை
தாம்தமிழர் என்கின்ற உணர்வைப் பற்றை
தீய்த்துவிட்டுத் தேசியமே பேசுகின்ற
திருடர்களைக் கொடியர்களைத் தமதி னத்தை
மாய்த்தொழிக்கும் வடவருக்குத் துணையாய் [நின்று
வயிறுவளர்த் தேபிழைக்கும் பதர்கள் தம்மை
நாய்க்குணத்தின் கீழ்க்குணத்தைக் கொண்டிட் [டோரை
நற்றமிழத் தாய்நாடே, நீ, ஏன் பெற்றாய்?

தொன்மையிலே பெருமையிலே புகழ்,சி றப்பில்
தோலாத வீரத்தில் மானந் தன்னில்
நன்மனத்தில் ஒழுக்கத்தில் அறத்தி னேடு
நயன்மைதனில் அன்பருளும் கொடையி [வற்றில்
குன்ருத நீர்கொண்ட கடல்சூழ்ந், திட்ட
கவினுலகிற் கெடுத்துக்காட் டாய்வாழ்ந் திட்ட
மென்றமிழர் இனத்திற்குக் களங்கம் சேர்க்கும்
வீணர்களை எதற்காகப் பெற்ருய் நீயே.

"வடநாட்டி லேபிறந்து வடவ ராக
மதிப்போடு பெருமையொடு வாழா மல்நாம்
இடம்மாறித் தமிழ்நாட்டில் பிறந்திட் டோமே?"
என்றேங்கும் தடுமாற்ற உணர்வு கொண்ட
மடயர்களைக் கடையர்களைத் தமிழினத்தை
மறைத்தின்றே இந்தியராய் மாற்று தற்குத்
துடிக்கின்ற வடவருக்குத் துணையாய் நிற்கும்
சிதம்பரங்கள் மூப்பர்களை நீ ஏன் பெற்றாய்?

அடிமைமதி மூப்பர்கள் சிதம்ப ரங்கள்
அருணுச லம்பழனி ஆண்டி யாரை
முடத்தெங்கைக் கோடரிக்காம் பொத்திட் டாரை
விளைபயிரி னிடை முளைத்த களைபோன் றாரை
வடவர்தமக் கொற்றர்களாய் இருந்து கொண்டு
விடுதலைக்குத் தடைச்சுவராய் குறுக்கே நின்று
இடையூறு செய்கின்ற இவர்கள் தம்மை
ஏன்பெற்றாய்? ஏன்பெற்றாய்? எம்தாய் நாடே!

தொலைக்காட்சித் தொடர்
'ஏழு தலைமுறை எழுச்சி'க்கு
எதிர்ப்புத் தெரிவியுங்கள்!

விளக்கம் தென்மொழி சு: 24 ஓ: 9. ஐப் பாருங்கள்!

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 32

சாதியை ஒழிக்க விரும்பினால், சாதியால் பெறும் நன்மைகளையும் ஒழிக்க வேண்டும்; இரண்டையும் விரும்புவது முரணானது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 114-115.

நூல் அஞ்சல்

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657